# NAMATHU EELANADU E-PAPER-APRIL-2026



# ??????????????????? ?????? ?????? ??????????? 38??? ?????? ??????? ??????? ??????? ??????????????? – 19/04/2026 (UK)







தமிழீழ சுயநிர்ணய அமைப்பினால், ஐக்கிய இராச்சியத்தில் நாட்டுப்பற்றாளர் அன்னை பூபதி அவர்களின் 38வது

ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு, அடையாள உண்ணாவிரதப் போராட்டம் மிகுந்த எழுச்சியுடன் லண்டன் நகரில் பிரதமர் அலுவலகமான 10 Downing Street முன்பு, ஞாயிற்றுக்கிழமை 19/04/2026 அன்று காலை 10.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை நடைபெற்றது.



இந்நிகழ்வு தமிழீழ தேசியக் கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

ஐக்கிய இராச்சியத்தின் தேசியக் கொடியை தமிழீழ சுயநிர்ணய அமைப்பின் தலைவர் முனைவர் சொக்கலிங்கம் யோகலிங்கம் அவர்கள் ஏற்றிவைத்தார்.
தமிழீழ தேசியக் கொடியை முன்னாள் போராளி முகுந்தன் அவர்கள் ஏற்றிவைத்தார். தமிழீழ சுயநிர்ணய அமைப்பின் செயலாளர் முனைவர் அருணாசலம் ராஜலிங்கம் அவர்கள் பொதுச்சுடரை ஏற்றிவைத்தார்.




நாட்டுப்பற்றாளர் அன்னை பூபதி அவர்களை நினைவுகூரும் விதமாக, நினைவுச் சுடரை செல்வி வளந்திஜா அவர்கள் ஏற்றிவைத்தார்.

மாலை அணிவிப்பு நிகழ்வில், ஒருங்கிணைப்பாளர்கள் ரஜீத்தா மற்றும் நிந்துயா அவர்கள் அன்னை பூபதி அவர்களின் நினைவுச் சிலைக்கு மாலை அணிவித்தனர்.



முதல் மலர் வணக்கத்தையும் விளக்கேற்றத்தையும் ஒருங்கிணைப்பாளர் ரவிகரன் துவாரகன் அவர்கள் ஆரம்பித்து வைத்தார். இதனைத் தொடர்ந்து பொதுமக்கள் மற்றும் தொண்டர்கள் அனைவரும் மலர் வணக்கம் செலுத்தினர்.

அகவணக்க நிகழ்வில், தாயக விடுதலைக்காக உயிர்நீத்த மாவீரர்கள், அப்பாவிகளாக உயிரிழந்த தமிழ் மக்கள், மாமனிதர்கள், நாட்டுப்பற்றாளர்கள் மற்றும் குறிப்பாக அன்னை பூபதி அவர்கள் ஆகியோரின் நினைவாக சிறுதுளி நேரம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

இதனைத் தொடர்ந்து அடையாள உண்ணாவிரதப் போராட்டம் ஆரம்பமானது.

நிகழ்வின் போது:
அன்னை பூபதி அவர்களைப் பற்றிய தேசப்பற்று பாடல்கள் பாடப்பட்டன, உரைகள் மற்றும் கவிதைகள் வழங்கப்பட்டன,
100-க்கும் மேற்பட்டோர் அடையாள உண்ணாவிரதத்தில் பங்கேற்றனர்.






இந்நிகழ்வில் தமிழீழ சுயநிர்ணய அமைப்பின் தலைவர் முனைவர் யோகலிங்கம் அவர்களின் உரையும், செயலாளர் முனைவர் ராஜலிங்கம் அவர்களின் உரையும், தேசிய செயற்பாட்டாளர்கள் மற்றும் பொதுமக்களின் உரைகளும் இடம்பெற்றன.



நிகழ்வின் இறுதியில், பங்கேற்ற அனைவருக்கும் பலரசம் வழங்கப்பட்டு, அடையாள உண்ணாவிரதம் நிறைவுற்றது. பின்னர் கொடி கையேற்பும் மற்றும் உறுதியேற்பும் இடம்பெற்று நிகழ்வு நிறைவடைந்தது. இந்த நிகழ்வை ராகவன் மற்றும் வளந்திஜா அவர்கள் திறம்பட ஒருங்கிணைத்து நடத்தி வைத்தனர்.




# [illegible] [illegible] [illegible] [illegible] CCD-UK [illegible] [illegible] [illegible] 2026





இலண்டனை தளமாகக் கொண்டு இயங்கும் தமிழ் தகவல் நடுவத்தின் (TIC) முன்னாள் நிறைவேற்று பணிப்பாளரான காலம் சென்ற திரு வரதகுமார் அவர்களின் சிந்தனையில் உருவாக்கப்பட்ட அறக்கட்டளை நிறுவனமான சமூக அபிவிருத்திக்கான மையம் (Centre for Community Development (CCD-UK) இலங்கையின் வடக்கு, கிழக்கு மற்றும் மலையக பிராந்தியங்களில் வாழும் பின்தங்கிய சமூகங்களுக்கு பலதரப்பட்ட வாழ்வாதார உதவிகளை வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது.



இவர்களின் இந்த சேவைகளுக்கான நிதி சேகரிப்பதற்கான நிகழ்வானது கடந்த சனிக்கிழமை 11 ஏப்பிரல் 2026 அன்று பிரித்தானியாவின் New Malden நகரிலுள்ள Shiraz Mirza Trust Manor Park Hall இல் சிறப்பாக இடம்பெற்றது. இந் நிகழ்வில் சமூக தலைவர்கள், கல்வியாளர்கள், இளைஞர்கள், தொழில்முனைவோர் மற்றும் பல்வேறு துறைகளைச் சேர்ந்த தமிழ் சமூக உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.



தாயகத்தில் யுத்தத்தால் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ள குடும்பங்களையும் அங்கவீனர்களான முன்னாள்

போராளிகள் மற்றும் கணவனை இழந்த பெண்களையும் சிறுவர்கள் மற்றும் முதியவர்களையும் கருத்தில் கொண்டு அவர்களுக்கான உதவி திட்டங்களை செயற்படுத்த நிதி திரட்டும் நோக்கில் இந் நிகழ்வானது ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.



மேலும் கடந்த காலங்களில் முன்னெடுக்கப்பட்ட செயற்பாடுகள், அதன் இயங்கு நிலை தொடர்பாகவும் எதிர் காலத்தில் முன்னெடுக்கப்படவுள்ள திட்டங்கள் தொடர்பாகவும் விரிவான கலந்துரையாடல்கள் இடம்பெற்றிருந்தமை இந் நிகழ்வின் மற்றுமொரு சிறப்பம்சமாகும்.



இந் நிகழ்வானது தமிழ் சமூக ஒருங்கிணைப்பு மற்றும் வளர்ச்சிக்கான முக்கிய தளமாக தொடர்ந்து அமைந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.




WELCOME TO
SHIRAZ MIRZA
COMMUNITY HALL





**NAMATHU EELANADU E-PAPER-MARCH-2026**


நமது
ஈழநாடு
www.namathueelanadu.com
குரல் 06 மலர் 66 மார்ச் 2026 மின்னஞ்சல்: contact@namathueelanadu.com இணையம்: www.namathueelanadu.com
Simply Scan the QR code Your Phone Camera
Download the NamathuEelanadu app
ஒரு உயிர் உன்னதமானது என்பதை நான் அறிவேன், ஆனால் உயிரிலும் உன்னதமானது எமது உரிமை, எமது சுதந்திரம், எமது கௌரவம்
- தமிழீழ தேசியத்தலைவர் மேதகு வே. பிரபாகரன்
மறைக்காதே!
Kumananimages
Photo journalist

[Eelanadu 03]

---

# ???????????? 2026


தமிழ்
மரபுத் திங்கள்
TAMIL
HERITAGE MONTH
JANUARY
Tamil
Heritage
Month
தமிழ் மரபுத் திங்கள்
CELEBRATE WITH US ON
SUNDAY
25th JANUARY 2026
10:30am TO 3pm
Free admission
Richard Challoner School,
Manor Dr N,
New Malden, KT3 5PA
KINGSTON
UPON THAMES




இலங்கையில் இடம்பெறும் தமிழருக்கு எதிரான திட்டமிட்ட இனப்படுகொலையின் அங்கமான கலாச்சார அழிப்பை முறியடித்து, எமது மொழியையும், பாரம்பரிய கலைகளையும் அடுத்த தலைமுறைக்கு எடுத்துச்செல்லும் நோக்கத்தில், புலம்பெயர் தமிழர்களின் முயற்சியால் பிரித்தானிய அரசு தை மாதத்தினை

“தமிழர் மரபுத் திங்கள்” என அண்மையில் பிரகடனப்படுத்தியது யாவரும் அறிந்ததே. இதனை கொண்டாடும் முகமாக வருடம் தோறும் தைமாதம் உலகின் தமிழர்கள் வாழும் பல்வேறு பகுதிகளில் மரபுத்திங்கள் விழா அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது.




அந்த வகையில், கடந்த ஞாயிற்றுக்கிழமை (25.01.2025) கிங்ஸ்டன் நகரசபையின் ஆதரவுடன், கிங்ஸ்டன் தமிழ்ப் பாரம்பரியக் குழுவினால் இலண்டன் நியூ மால்டனில் அமைந்துள்ள றிச்சார்ட் சல்லோனர் பாடசாலையில் (Richard Challoner School, Manor Dr N, New Malden, London) ஏற்பாடு செய்யப்பட்டிருந்த **?????? ?????????????? ????** சிறப்பாகவும் வெற்றிகரமாகவும் நடைபெறியது.

இக்கிங்ஸ்டன் தமிழ்ப் பாரம்பரியக் குழுவில் சமூக அபிவிருத்திக்கான மையம் (CCD), தமிழ் தகவல் நடுவம் (TIC), ITC கிங்ஸ்டன் தமிழ் கல்விக்கூடம் மற்றும் சரே தமிழ் கல்விக்கூடம் ஆகிய அமைப்புகள் இணைந்து செயல்பட்டன.







இதன் சிறப்பு விருந்தினராக, பாராளுமன்ற உறுப்பினரும் லிபரல் டெமேகிரடிக் கட்சியின் தலைவருமான, அதிமதிப்புக்குரிய சேர் எட் டேவி (Rt. Hon. Sir. Ed Davey) அவர்கள் மற்றும் நகர முதல்வர்கள் கலந்து

சிறப்பித்தனர்.




இந்நிகழ்வின் ஆரம்பமாக, மகா பண்டிதன் என்று போற்றப்படுகின்ற பத்து தலை கொண்ட தமிழ் அரசன் இராவணன் போல் வேடம் தரித்து ஒருவர் முன்னே செல்ல தமிழர்களாகிய நமது பாரம்பரிய இசைவாத்தியங்களுடன் (நாதஸ்வரம், தவில், தம்பட்டம், பறை, கொம்பு, குழல) மங்கள இசை முழங்க பாரம்பரிய நடனக்கலைகளுடனும் (கரகம், காவடி, புலியாட்டம்) நமது கலாச்சாரத்தை வெளிப்படுத்தும் முகமாக அழகான பெண் ஒருத்தி கையில் தீச்சட்டி ஏந்திவர விருந்தினர்கள் அழைத்துவரப்பட்டு பொங்கல் நிகழ்வானது இடம்பெற்றது.


தமிழ்
HERITAGE MONTH
Sponsored by
franco
Tamil Heritage Month Celebrations
தமிழ் மரபுத் திங்கள்
கொண்டாட்டம்
All are welcome!
@SumanParameswaran
3 YLX


தமிழ்
HERITAGE MONTH
Sponsored by
Tamil Heritage Month Celebrations
கொண்டாட்டம்
All are welcome!
@AnushanBalasubramaniam




அதனைத்தொடர்ந்து மேடையினை மங்கள இசைகள் (நாதஸ்வரம், தவில்) அலங்கரிக்க ஒரு நிமிட மௌன அஞ்சலியுடன் நிகழ்வுகளானது ஆரம்பமானது. முதல் நிகழ்வாக தமிழ்த்தாய் வாழ்த்து இசைக்கப்பட்டது. அதனைத்தொடர்ந்து கவுன்சிலர் தயாளன் (Councillor Thayalan)அவர்களால் வரவேற்பு உரை நிகழ்த்தப்பட்டது. தொடர்ந்து சிறப்பு விருந்தினர்கள் மாலை அணிவித்து கௌரவிக்கப்பட்டார்கள். தொடர்ந்து சிறப்பு விருந்தினர்களின் உரை இடம்பெற்றது.




தொடர்ந்து கிங்ஸ்ரன் தமிழ்ப் பாடசாலை மாணவர்களால் புராணக்கதையுடன் கூடிய பரதநாட்டிய நடனமானது கண்ணுக்கு இனிமை தரும் வகையில் இடம்பெற்றது. கறோ தமிழ்ப் பாடசாலை சின்னஞ்சிறு சிறுமிகளால் சிறப்பான பரதநாட்டிய நடமானது வழங்கப்பட்டது. தொடர்ந்து தவில் மற்றும் பறை இசை வாத்தியத்துடனான நடனம் இடம்பெற்றது அது பார்வையாளர்களிடையே உற்சாகம் தரும் வகையில் அமைந்தது. கலைக்கு வயது தடை அல்ல என்பதை நிரூபிக்கும் வகையில் பெண்கள் குழுவினரால் அழகான நடமானது வழங்கப்பட்டது.




தொடர்ந்து நமது மனதுக்கு மிகவும் நெருக்கமான காத்தவராயன் கூத்தின் ஒரு பகுதி, செல்வி வர்ணவி தவகணேஸ் அவர்களால் வழங்கப்பட்டது. கிங்ஸ்ரன் தமிழ்ப் பாடசாலை மாணவர்களால் மற்றுமொரு நடனமானது வழங்கப்பட்டது. தொடர்ந்து மெய்வெளி நாடக கலைஞர்களால் தமிழையும் அதன் மரபையும் ஒன்றிணைக்கும் முகமாக "வேரின் குரல்" எனும் தலைப்பில் கிராமிய நடமானது வழங்கப்பட்டது. அதில் தற்காலத்தில் வாழும் முதியவர்கள் தமிழ் மற்றும் அதன் பண்பாடு அழிந்து போவதை கண்டு அஞ்சும் தன்மையையும் தற்கால இளையோர்களின் வாழ்க்கை முறையையும் எடுத்து காட்டும் வகையிலும் ஈழத்தமிழர்களின் வலியினையும் சுமந்து அமைந்தது குறிப்பிடத்தக்க ஒன்றாகும். தொடர்ந்து வைத்தியர் தேவா நாதன் அவர்களின் நன்றி உரையுடன் நிகழ்வானது சிறப்பாக நிறைவுபெற்றது.




இந் நிகழ்வினை பல நூற்றுக்கணக்கான தமிழர்கள் இணைந்து சிறப்பாக கொண்டாடியிருந்தார்கள்.

தமிழர் பண்பாடு அழகான ஒழுக்கத்தின் அடையாளம். தமிழர்களின் உணவு ஆரோக்கியத்தின் அடித்தளம். "அறம், பொருள், இன்பம்" எனும் மூன்று சொல்லில் வாழ்க்கையை சொன்ன செம்மொழி அதனால் தான் இத்தனை நூற்றாண்டுகள் கடந்தும் உயிர்ப்போடு இருக்கின்றது அதுவே அதன் பெருமை. தமிழ் மரபை காக்க பழைய காலத்துக்கு போக வேண்டியதில்லை. தமிழ் பேசினாலே போதும். தமிழை நேசித்தாலே போதும். தமிழ் மரபை நம் அன்றாட வாழ்க்கையில் சிறிதாவது வாழ்ந்தாலே போதும். மரபு பாரமாக அல்லாமல் பெருமையாக இருக்க வேண்டும்.


@AnushanBalasubramaniam


DUNSTAN
@AnushanBalasubramaniam


@AnushanBalasubramaniam


மரபுத் திங்கள்
TAMIL
@AnushanBalasubramaniam


@AnushanBalasubramaniam


@AnushanBalasubramaniam




ELDERS EMPOWERMENT PROGRAMME
@SumanParameswaran




@SumanParameswaran


@AnushanBalasubramaniam


ELDERS
EMPOWERMENT
@SumanParameswaran


JANUARY
@SumanParameswaran





# NAMATHU EELANADU E-PAPER-DECEMBER-2025

